*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN: 2456-5148 (Online)**
*An international, peer-reviewed quarterly academic research journal* **www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International

DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p250-262** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# கிராமவெளி விருப்பும் நகரவெளி மறுப்பும்

## (இமையத்தின் கோவேறு கழுதைகள், ஆறுமுகம், செடல் நாவல்களை முன்வைத்து)

Desire for Rural Space and Rejection of Urban Space (With reference to Imayam's novels: Koveru Kazhudhaigal, Arumugam, and Sedal)

**திருமூர்த்தி க,**

*பதிவு எண்: BDU2110632779687, பதவி: முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, நிறுவனம்: தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது) திருச்சிராப்பள்ளி – 620 023.*

**Thirumoorthy G*,**

*Reg.No.: BDU2110632779687, Full Time Research Scholar, PG & Research, Department of Tamil, Thanthai Periyar Government Arts & Science College (A), (Affiliated Bharathidasan University), Tiruchirappalli - 620 023*
*Ph.No.: 9600274195, Email.: thirumoorthisuthi@gmail.com , ORCID. https://orcid.org/0009-0007-5626-1209*

**Supervisor: Dr. K. Kasimariyappan (Retd.)**
*Associate Professor, Department of Tamil, Thanthai Periyar Government Arts and Science College (Autonomous) (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli – 620 023.*

**Co-Supervisor: Dr. A. Selvarasu,** *Associate Professor, Department of Tamil Thanthai Periyar Government Arts and Science College (Autonomous), (Affiliated to Bharathidasan University) Tiruchirappalli – 620 023.*

*Article history*
Received: 10-08-2026
Revised: 10-08-2026
Accepted: 12-08-2026
**Published: 13-08-2026**

*Corresponding Author Email: *thirumoorthisuthi@gmail.com*

**Abstract:** Imayam's novels Koveru Kazhudhaigal (1994), Arumugam (1999), and Sedal (2006) are centered on the binary opposition between rural and urban spaces. Although the characters in these novels get opportunities to move toward urban spaces, they either return to the rural fold or face broken, fragmented lives within the urban environment. While the rural space operates as a site that reproduces caste, gender, and economic oppressions, the urban space offers alternative possibilities of living—such as education, employment, economic progress, and individual freedom. However, in Imayam's early novels, the urban space fails to establish itself as a realm of liberation; instead, the cultural draw and social control of the rural space are depicted as overriding. This paper analyzes, through the lens of the concept of 'Space', this fictional perspective that prioritizes the rural space while rejecting the urban space.

**Keywords:** *Imayam's novel*, *Koveru Kazhudhaigal*, *Tamil Literature*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**முன்னுரை**

இமையத்தின் கோவேறு கழுதைகள் (1994), ஆறுமுகம் (1999), செடல் (2006) ஆகிய நாவல்கள், கிராமவெளி – நகர்வெளி என்ற இருமை எதிர்வை மையமாகக் கொண்டுள்ளன. இந்நாவல்களில் கதைமாந்தர்கள் நகர்வெளியை நோக்கிச் செல்லும் வாய்ப்பைப் பெற்றாலும், அவர்கள் மீண்டும் கிராமவெளிக்கே திரும்புகின்றனர் அல்லது நகர்வெளியிலேயே சிதைவுற்ற வாழ்க்கையை எதிர்கொள்கின்றனர். கிராமவெளி சாதி, பாலினம், பொருளாதார ஒடுக்குமுறைகளை மீளுருவாக்கும் வெளியாக இயங்கும்போது, நகர்வெளி கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், தனிநபர் சுதந்திரம் போன்ற மாற்று வாழ்வியல் சாத்தியங்களை வழங்குகிறது. ஆயினும், இமையத்தின் தொடக்க நாவல்களில் நகர்வெளி விடுதலையின் வெளியாக நிலைபெறாமல், கிராமவெளியின் பண்பாட்டு ஈர்ப்பும் கட்டுப்பாடும் மேலோங்கிய நிலையில் சித்திரிக்கப்படுகிறது. இவ்வாறு கிராமவெளியை முன்னிறுத்தி நகர்வெளியை மறுக்கும் புனைவியல் நோக்கை, 'வெளி' (space) கருத்தாக்கத்தின் அடிப்படையில் இக்கட்டுரை ஆராய்கிறது.

***கிராமவெளி எனும் சாதியவெளி***

இமையத்தின் நாவல்களில் கிராமவெளி என்பது வெறும் குடியிருப்புப் பகுதியாகச் சித்திரிக்கப்படுவதில்லை; அது சாதி, தொழில் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பண்பாட்டு வெளியாகக் கட்டமைக்கப்படுகிறது. குடியிருப்புகள், தெருக்கள், நீர்நிலைகள், கோயில்கள், பஞ்சாயத்துகள், பொதுவெளிகள், சுடுகாடுகள் அனைத்தும் சாதிப் படிநிலைக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன.

நிலவுடைமையும் பொருளாதார அதிகாரமும் கொண்ட ஆதிக்கச் சாதியினரின் குடியிருப்புகள் கிராமத்தின் மேடான, மையப்பகுதிகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் குடியிருப்புகள் சேரி, காலனி, தோப்பு, புறம்போக்கிடம் போன்ற கிராமத்தின் விளிம்புப் பகுதிகளிலும் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் ஒரே கிராமவெளிக்குள்ளேயே மையம்–விளிம்பு என்ற அதிகாரப் படிநிலை உருவாக்கப்படுகிறது.

**கோவேறு கழுதைகள்**, **ஆறுமுகம்**, **செடல்** ஆகிய நாவல்கள் இந்தச் சாதியவெளியைப் பதிவு செய்கின்றன. சேரி, காலனி, தோப்பு, புறம்போக்கிடம் போன்ற வெளிகள் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. கவுண்டர், உடையார், சேர்வை, செட்டியார், நாயுடு, ரெட்டியார் போன்ற ஆதிக்கச் சாதியினரின் குடியிருப்புகள் வளமான நிலங்களும் பள்ளிக்கூடம், காவல் நிலையம் போன்ற பொதுநிறுவனங்களும் அமைந்துள்ள மையப்பகுதிகளில் அமைகின்றன.

**கோவேறு கழுதைகள்** நாவலில் ஆரோக்கியம், பெரியான் குடும்பங்களின் குடியிருப்புகள் கிராமத்தின் விளிம்புப் பகுதியில் அமைந்துள்ளன. அவற்றைச் சுற்றியுள்ள கருவேலங்காடு, சுகாதாரமற்ற சூழல், சேறும் சகதியுமான ஒற்றையடிப் பாதை ஆகியவை ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விடத்தை சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட வெளியாகக் கட்டமைக்கின்றன. இதனை, *"ஊருக்கும் வண்ணான், சக்கிலியக்குடிக்கும் இடையே கருவேலங்காட்டைப் பிளந்து ஒரு பாதை இருக்கிறது... ஒரு ஆள் மட்டுமே நடக்க வசதியான பாதை"* (1994:81–82) என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன. இவை வாழ்விடப் பிரிவினை வெறும் புவியியல் தூரமாக அல்லாமல், சாதி அடிப்படையிலான சமூக இடைவெளியாகப் புனைவாக்குகிறது. கருவேலங்காடு இயற்கை எல்லையாக இல்லாமல், ஆதிக்கச் சாதியினருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான அதிகார எல்லையாகச் செயல்படுகிறது. இதனால் வாழ்விட அமைப்பே சாதியப் படிநிலையை நிலைநிறுத்தும் வெளியியல் அரசியலாக மாறுகிறது.

இதேபோன்று **ஆறுமுகம்** நாவலில் தனபாக்கியத்தின் சொந்த ஊரான பூத்துறையில், *"எப்போது மாடு அறுத்தாலும் புளியமரத்தின் அடியில்தான் அறுப்பார்கள். அதனால்... 'மாடு அடிச்சான் தோப்பு' என்று பெயராகிவிட்டது"*(1999:61) எனும் குறிப்பு இடம்பெறுகிறது. மாட்டறுப்பு நடைபெறும் இடத்தின் பெயரே அப்பகுதியின் அடையாளமாக மாறியிருப்பது, வாழ்விடங்களும் சமூக மதிப்பீடுகளும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதைக் காட்டுகிறது. இடப்பெயரே அசுத்தம் என்ற பண்பாட்டு கருத்தியலைச் சுமக்கும் அடையாளமாக உருமாறுகிறது.

அதேபோல் **செடல்** நாவலில் செடலின் குடியிருப்பு, *"பறத்தெரு மாரியம்மன் கோயிலுக்குச் சிறிது தள்ளி வடக்குப்புறமாகப் புதிதாகக் கட்டியிருந்த சாலை வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு வந்தார்கள்..., கோயிலுக்குப் பின்புறம் அடர்ந்த கருவேலங்காடு. இருநூறு முந்நூறு அடி தூரம் தள்ளிதான் வீடுகள் இருக்கின்றன. அங்கு இவ்வளவு மோசமாகக் கொசுக்கள் கடிக்காது..."* (2006:19,34) என விவரிக்கப்படுகிறது. இந்த வருணனை, விளிம்புநிலை மக்களின் வாழ்விடங்களில் நிலவும் பாதுகாப்பின்மை, அடிப்படை வசதியின்மையை உணர்த்துகிறது.

ஆரோக்கியம், தனபாக்கியம், செடல் ஆகியோரின் குடியிருப்புகள் அனைத்தும் காலனி, தோப்பு, புறம்போக்கிடம் போன்ற கிராமத்தின் விளிம்புப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவ்விடங்கள் குடியிருப்புகளாக மட்டுமல்லாமல், சாதி அடிப்படையிலான சமூக ஒழுங்கை நிலைநிறுத்தும் அதிகார வெளிகளாகவும் அமைகின்றன. இதன் மூலம் கிராமவெளியில் மையம் × விளிம்பு, சுத்தம் × அசுத்தம் ஆகிய இருமை எதிர்வுகள் வாழ்விட அமைப்பின் வழியாக மீளுருவாக்கப்படுகின்றன.

### *தூய்மை (புனிதம்) × அசுத்தம் (தீட்டு)*

*தூய்மை–அசுத்தம் என்ற இருமை எதிர்வு, இந்தியச் சாதியச் சமூகத்தின் அடிப்படைக் கருத்தியல் கூறுகளில் ஒன்றாகும். மனிதர்களின் குடியிருப்பு, தொழில், உடல், உணவு, உடை, வழிபாடு போன்ற வாழ்வியல் கூறுகளை சாதி அடிப்படையில் வேறுபடுத்தி மதிப்பிடுகிறது. இவ்வேறுபாடு இயற்கையாக உருவானதல்ல; மாறாக, சமூக அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பண்பாட்டு அரசியலாகும். இதன் வழி உயர்வு–தாழ்வு என்ற படிநிலைக் கட்டமைப்பு தொடர்ந்து மீளுருவாக்கப்படுகிறது.*

*இமையத்தின் கோவேறு கழுதைகள், ஆறுமுகம், செடல் நாவல்கள் தூய்மை–அசுத்தம் என்ற கருத்து சாதி, குலத்தொழில், பாலினம் ஆகியவற்றின் மீது எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பதிவு செய்கின்றன. இந்நாவல்களில் சமூக உறவுகள் மட்டுமல்லாது, வாழ்விடங்கள், தொழில்கள், உடல்கள், உணவுப் பங்கீடுகள் அனைத்தும் தூய்மை–அசுத்தம் என்ற கருத்தியல் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. இவை சாதி அமைப்பின் தோற்றம் ஆகும். சாதியானது, “மனுஸ்மிருதியில் முன்வைக்கப்பட்ட வர்ணக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்தியச் சமூகத்தில் படிநிலை அமைப்பால் உருவாக்கப்பட்டதாக” சுரிந்தர் எஸ். ஜோத்கா (2022:21-22) குறிப்பிடுகிறார். பிராமணர் முதல் தலித்துகள் வரை படிநிலைப்படுத்தப்படும் இச்சாதிய அமைப்பு, தூய்மை–தீட்டு என்ற கருத்தியல் வழியாகச் சமூக ஏற்றத்தாழ்வை இயல்பானதாகக் காட்டுகிறது. இதனால் அதிகாரம் பெற்ற சாதியினர் தங்களைப் புனிதத்தின் அடையாளமாகவும், ஒடுக்கப்பட்டோர் தீட்டின் அடையாளமாகவும் காட்டப்படுகின்றனர்.*

*இந்தப் பண்பாட்டு அரசியல் இமையத்தின் புனைவுகளில் அன்றாட வாழ்க்கையின் வழியாக வெளிப்படுகிறது. அழுக்கு அகற்றுதல், துணி துவைத்தல், கூடை பின்னுதல், சாமி சேவை போன்ற குலத்தொழில்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் அடையாளங்களாகக் குறிக்கப்படுகின்றன. தொழிலும் சமூக மரியாதையும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, அசுத்தமான தொழிலைச் செய்பவர்கள் அசுத்தமான மனிதர்களாகக் கருதப்படும் மனப்போக்கை நாவல்கள் வெளிப்படுத்துகின்றன.*

*கோவேறு கழுதைகள் நாவலில் புதிரை வண்ணார் சமூகத்தினர் பிறரின் அசுத்தத்தை அகற்றும் தொழிலைச் செய்தாலும், அவர்களுக்குச் சமூக மரியாதை வழங்கப்படுவதில்லை. திருவிழாவில் பன்றி இறைச்சி பகிர்ந்தளிக்கப்படும் நிகழ்வில், தலை, குடல் போன்ற பகுதிகள் மட்டுமே வண்ணார்களுக்குக் கொடுக்கப்படுகின்றன; சதைப் பகுதிகள் ஆதிக்கச் சாதியினரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.*

*உணவுப் பகிர்வில்கூட சாதி அடிப்படையிலான தூய்மை–அசுத்தக் கருத்தியல் செயல்படுவதை இந்நிகழ்வு வெளிப்படுத்துகிறது.*

*செடல் நாவலில் பெண்களின் உடல், ஒழுக்கம், பாலியல் நடத்தைகள் தூய்மை–அசுத்தம் என்ற பண்பாட்டு மதிப்பீட்டின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றன. மரபு மீறியதாகக் கருதப்படும் பெண் கடுமையான சமூகத் தண்டனைக்கு ஆளாகிறார். "ராஜாம்பாளுக்கு ஏந்தல் பாளையப்பட்டுத் தலைமையில் பொட்டுக்கட்டினார்கள். பத்துப் பதினைந்து வருசம் ராஜாம்பாள் நல்ல மாதிரியாகத்தான் இருந்தாள். பிறகு ஆண்களோடு அவளுக்குச் சவகாசம் ஏற்பட்டுவிட்டது. அது பல ஊர்களுக்கும் தெரிந்தும்போயிற்று. விஷயம் பாளையப்பட்டிடம் பஞ்சாயத்துக்குப் போயிற்று. அப்போது அவர் ராஜாம்பாளைப் பூவரசு மரத்தில் கட்டிவைத்துப் புளியங்குச்சியால் அடித்து நொறுக்கினார்" (2006:09) இவ்வாறு ராஜாம்பாள் பொதுவெளியில் தண்டிக்கப்படும் நிகழ்வு, பெண் உடலின் மீது சமூகமும் சாதியும் செலுத்தும் அதிகாரத்தின் வெளிப்பாடாக அமைகிறது.*

அதேபோன்று **ஆறுமுகம்** நாவலின் தனபாக்கியம் வாழ்க்கை, பாலியல் ஒழுக்கம்**,** குடும்ப மரியாதை ஆகியவற்றோடு இணைத்து மதிப்பிடப்படுகிறது. சமூக ஒழுக்கநெறிகளை மீறியதாகக் கருதப்படும் பெண்ணின் உடல், குடும்பத்தின் அவமானமாகக் கருதப்படுகிறது. "சமையல்கட்டில் மின்விசிறி தொங்கவிட இருந்த கொக்கியில், குளித்துவிட்டு, தலைசீவி, புதுப்பெண்போலச் சிங்காரம் செய்துகொண்டு ஆறுமுகத்தின் மேல்சட்டையை மடியில் கட்டிக்கொண்டு சேலையை மாட்டிக்கொண்டு எந்த நேரத்திற்குத் தொங்கியிருப்பாள்? பிணத்தைத் தூக்கிலிருந்து இறக்குவதற்காக வந்து கூப்பிட்ட வசந்தாவிடம் வெறிகொண்டவன் மாதிரி தரையில் ஓங்கி ஓங்கிக் குத்திய ஆறுமுகம் அழுதவாறே சொன்னான்: முடியாது. நான் எகுக்குப் பாக்கணும்? அங்காம செய்ய, அனுசரன செய்ய, தேப்புமாப்பு செய்ய ஆளில்லாம செத்துப்போன பொணத்த நான் எதுக்குப் பாக்கணும்?" இமையம், (1999:207) என ரா. ஆறுமுகம் புலம்புவது வழமையான பால் வகிபாகத்தையும் கற்பு ஒழுக்கநெறியையும் காட்டுகின்றன. "பெண்ணை மையமிட்டே பாலியல் கட்டப்படுகிறது. செல்வ, நில, ஆட்சி, உடைமைகள் ஆகியன ஆணுக்கு வழங்கப்பட்ட பின்பு பெண்ணின் பாலியல் சுதந்திரம் வரையறைக்கு உட்படத்தப்பட்டது. பாலியல் விதிமுறைகள் இயல்பான/இயற்கையான நிலையின என்பவை மாறி, நிறுவனமயப்பட்டன. ஆணுக்கான சுதந்திரவெளியைப் பாலியல் அதிகாரம் வழங்கியது. பெண்ணின் பாலியல் உணர்வு மட்டுப்படுத்தப்பட்டது. உடைமைக் கருத்தாக்கம் மேலோங்கியதால் பாலியல் அதிகார ஆட்சி நடைமுறைக்கு வந்தது என்று பழந்தமிழ்ச் சமூக அமைப்பை ராஜ்கௌதமன் மதிப்பிட்டதை கா. விக்னேஷ் (2026:31) குறிப்பிடுகிறார். இவை தாராளமயம், நவீனமயம், உலகமயம் போன்றவற்றைக் குறிப்பிடும் ஆறுமுகம் நாவல் தந்தையகமீள்வேக்கமாக தகிக்கிறது. எனவே, இமையத்தின் தொடக்க நாவல்களில் தூய்மை–

அசுத்தம் என்ற இருமை எதிர்வு வெறும் சமய அல்லது பண்பாட்டு நம்பிக்கையாக மட்டும் அமையவில்லை. அது சாதி, பாலினம், தொழில், வாழ்விடம் ஆகிய அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் அதிகாரக் கருத்தியலாகச் செயல்படுகிறது.

**நிலமும் பெண்ணும்**

இமையத்தின் **கோவேறு கழுதைகள்**, **ஆறுமுகம்**, **செடல்** ஆகிய நாவல்களில் பெண் உடல், நிலம், உடைமை ஆகிய மூன்று கூறுகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த பண்பாட்டு அடையாளங்களாகக் கட்டமைக்கப்படுகின்றன. கிராமவெளியில் நிலம் விளைச்சலையும் வளமையையும் வழங்கும் உடைமையாகக் கருதப்படுவதுபோல, பெண் உடலும் குடும்பத்தின் தொடர்ச்சி, இனப்பெருக்கம், சமூக மரபின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் வளமாகக் கருதப்படுகிறது. இவ்வாறு நிலம்–பெண் என்ற ஒப்புமை வெறும் இலக்கிய உருவகமாக இல்லாமல், ஆணாதிக்கச் சமூகத்தின் உடைமை அரசியலை வெளிப்படுத்தும் கருத்தியல் கூறாக அமைகிறது.

நிலத்தை ஆளும் உரிமை எவ்வாறு ஆணின் சமூக அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறதோ, அதேபோன்று பெண் உடலின் மீது செலுத்தப்படும் கட்டுப்பாடும் ஆணாதிக்கத்தின் நீட்சியாக இயங்குகிறது. இந்தக் கருத்தை விளக்கும்போது, க. காசிமாரியப்பன், *“நிலமென்பதை உடலாகவும் உயிராகவும் எண்ணும் மனம் அதைப் பெண்ணாகவும் கருதுகிறது”*(2024:120) என்று குறிப்பிடுகிறார். இந்தப் பார்வை, நிலமும் பெண்மையும் வளமையின் குறியீடுகளாகப் பண்பாட்டில் இணைக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது.

**கோவேறு கழுதைகள்** நாவலில் ஆரோக்கியம் வயல், மண், ஓடை, தொரப்பாடு, குடிசை போன்ற வெளிகளோடு தொடர்ச்சியாக இணைத்து சித்திரிக்கப்படுகிறார். வயல்வெளியின் பசுமை, மண்ணின் மணம், பயிர்களின் செழிப்பு ஆகியவற்றை ரசிக்கும் ஆரோக்கியத்தின் அனுபவம், “தொரப்பாட்டில் துணியை அடித்துக் காயப்போட்டவுடன் அலுப்பாயிருந்தாலும் படுக்க மாட்டாள். வயல்களில் சுற்றி வருவாள். ஓடையைச் சுற்றியுள்ள வயல்கள்தான் எவ்வளவு பசுமையாக இருக்கும். வரப்பில் நடக்கும்போது ஏதோ ஒரு மணம் வரும். எல்லாம் கலந்த கலவையாக இருக்கும். கண்ணுக்கெட்டியவரை ஒரே பசுமைதான். விதவிதமான பயிர் வகைகள். எல்லாவற்றிலிருந்தும் மணம் ஒரே நேரத்தில் காற்றில் கலந்துவரும். காட்டுப்பூக்களின் மணம். இந்த மண்ணின் மணம்தான் தூக்கலாய் வரும். ஒவ்வொரு வயலாய்ச் சுற்றி வரும்போது, கத்திரி, கொத்தவரங்காய், வெண்டை, தக்காளி என்று அஞ்சாமல் பறிப்பாள் புளிச்சக் கீரை, தண்டுக் கீரை என்று பிடுங்கி வருவாள். தொரப்பாட்டுக்கு வரும்போது ஒரு வாரத்திற்குத் தேவையான கீரை, காய்கறிகள் அவள் மடியில் இருக்கும்” (1994:167) எனவும், “சில நேரங்களில் மரங்களின் நிழலில் அமர்ந்தபடியே விரல்களால் மணலில் கோடுகள் கிழிப்பாள். விரல்கள் வீடு கிளம்பும்வரை நிற்காது. கிழித்த அதே பழைய, ஒரே கோட்டிலேயே விரல்கள் சுழன்று சுழன்று வரும். அவள் அக்கோட்டையே அழுத்தி அழுத்திக்

கிழிப்பாள். கண்களிலிருந்து மணலில் நேரே நீர் இறங்கும்" (1994:167) என்கிற கூற்றுகள் கிராமவெளி நிலத்தோடு, தொரப்பாட்டு வெளியோடு ஆரோக்கியத்தை இணைத்தல் அமைகிறது. இயற்கையுடனான அவரது உடனிணைப்பை மட்டுமல்லாமல், நிலவெளியோடு பெண் உடலைப் பண்பாட்டுரீதியாக இணைக்கும் புனைவியல் உத்தியையும் வெளிப்படுத்துகிறது. இதன்மூலம் பெண் உடல் இயற்கையின் தொடர்ச்சியாகக் கற்பனை செய்யப்படுகிறது.

**ஆறுமுகம்** நாவலில் தனபாக்கியத்தின் வாழ்வியல், வீடு, ஏரி, கிணறு, உழைப்பு ஆகிய வெளிகளோடு இணைந்து அமைகிறது. "தனபாக்கியம் ஆசைப்பட்டால் வேலைக்குப் போவாள். அதுவும் சும்மா குந்தியே கெடக்கறது பித்துப் பிடிச்சாப்ல இருக்கு என்றுதான் போவாள். இல்லையென்றால் வீட்டைச் சுத்தப்படுத்துவது, துணி துவைப்பது, விதவிதமான சோறுசெய்து வைத்துக்கொண்டு ராமனுக்காகக் காத்திருப்பதுதான் அவளுடைய முக்கியமான வேலையும் அவள் விரும்பிய வேலையும்" (1999:10) என விவரிக்கப்படுகிறது. ராமன் வாழும்நாளில் தனபாக்கியத்தின் உலகம் வீட்டை மையமாகக் கொண்டிருந்தாலும், ராமன் இறப்பிற்குப் பிறகு தனபாக்கியம் வெளி மாற்றமடைகிறது. இந்த மாற்றம் பெண் வாழ்க்கை தனிநபர் விருப்பத்தால் அல்ல; சமூக உறவுகள், குடும்ப அமைப்புகளால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

**செடல்** நாவலில் பெண் உடல் மழை, வளமை, தெய்வீக ஆற்றல் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்படுகிறது. பொட்டுக்கட்டுதல் மழையை வரவழைக்கும் என்ற ஐதிகம், பெண் உடலை இயற்கை வளத்துடன் இணைக்கும் பண்பாட்டு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இத்தகைய உருவகங்கள் பெண் உடலை இயற்கையின் அடையாளமாகக் கொண்டாடுவதோடு, அதனை ஆணாதிக்கக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் பண்பாட்டு அரசியலையும் மறைமுகமாகச் செயல்படுத்துகின்றன.

இ. முத்தையா குறிப்பிடுவது போல, "இயற்கை (Natural) வடிவமாக இருந்த நிலம் ஆண்களின் மேலாதிக்கச் செயல்பாட்டின் விளைவால் நாடு என்னும் பண்பாட்டு அமைப்பாக (Cultural or Unnatural) மாற்றப்பட்டது. எப்போது நிலம் ஆண்களின் உடைமையாக மாற்றப்பட்டதோ அப்போதே பெண்ணும் ஆண்களின் உடைமைப் பொருளாக மாற்றப்பட்டார்" (1998:53) என்பன இயற்கையாக இருந்த நிலம் ஆண்களின் மேலாதிக்கத்தின் விளைவாக உடைமைப் பொருளாக மாற்றப்பட்டபோது, பெண்ணும் அதே உடைமைக்குள் கொண்டுவரப்பட்டார். இவை நிலம், பெண்மை ஆகிய இரண்டின் மீதும் உரிமை செலுத்தும் தந்தைவழிச் சமூகத்தின் கருத்தியலை விளக்குகிறது.

இமையத்தின் நாவல்களில் பெண்களின் உழைப்பும் இந்த உடைமை அரசியலின் ஒரு பகுதியாகவே அமைகிறது. ஆரோக்கியம் குலத்தொழிலோடு, தனபாக்கியம் கூடைப் பின்னுதல் போன்ற உழைப்போடு, செடல் சாமி சேவை, கூத்து போன்ற நாட்டுப்புறப் பண்பாட்டு உழைப்போடு தொடர்புபடுத்தப்படுகின்றனர். அவர்களின் உடல்கள் தனிப்பட்ட வாழ்வின் அடையாளங்களாக

அல்லாமல், சமூக உற்பத்தி, மரபு, பண்பாட்டு தொடர்ச்சியைத் தாங்கும் வெளியாகப் புனையப்படுகின்றன.

இதனால், நிலம்–பெண்–உடைமை என்ற மும்முக உறவு இமையத்தின் புனைவுலகில் ஆணாதிக்க அதிகார அரசியலின் மையக் கூறாக விளங்குகிறது. பெண் உடலை நிலத்துடன் ஒப்புமைப்படுத்தும் உருவகங்கள், பெண்மையைப் போற்றும் நோக்கில் அல்ல; மாறாக, அதனை உடைமையாக்கி கட்டுப்படுத்தும் சமூகக் கருத்தியலை வெளிப்படுத்தும் புனைவியல் உத்தியாகவே செயல்படுகின்றன எனக் கருதலாம்.

***பெண்ணுடல் அழிப்பு***

இமையத்தின் **கோவேறு கழுதைகள், ஆறுமுகம், செடல்** ஆகிய நாவல்களில் பெண் உடல் பாலினம், சாதி, நிலவுடைமை ஆகிய அதிகாரக் கட்டமைப்புகள் ஒன்றிணைந்து செயல்படும் பண்பாட்டு வெளியாகச் சித்திரிக்கப்படுகிறது. இந்நாவல்களில் பாலியல் வன்முறை என்பது தனிநபர் குற்றச்செயலாக மட்டும் சித்திரிக்கப்படுவதில்லை; மாறாக, சாதி, ஆணாதிக்க அதிகாரத்தை நிலைநிறுத்தும் சமூகச் செயல்முறையாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. “பொட்டுக்கட்டி விடப்பட்ட பெண்களும் லேசுப்பட்டவர்களில்லை. பின்னாலேயே சுற்றிச் சுற்றி வருகிற பையன்களிடம் சகஜமாகச் சிரித்துப் பேசுவார்கள். சட்டைப் பையில் கையை விட்டுக் காசு எடுக்கப்பார்ப்பார்கள். ‘சீல துணி ஒண்ணு எடுத்துத்தா. வெத்தலெ பாக்கு வாங்கக் காசி தா. பகடரு டப்பி, பொட்டு வாங்கியாந்தாத்தான் ஒங்கூடப் பேசுவன்’ என்று சொல்லிப் பசப்புவார்கள்… செடலுக்கு யாரும் சொல்லித் தர வேண்டியதில்லை. எல்லா விசயமும் அவளுக்கு அத்துப்படிதான். அவளாகப் போய் எதையும் போய் கேட்க வேண்டியதில்லை. எல்லாமும் தானாகவே நடந்துவிடும்.” (இமையம், 2006:149) இதன் மூலம் பெண் உடல் தனிநபரின் உரிமைக்குரிய வெளியாக அல்லாமல், சமூக அதிகாரத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட வெளியாகப் புனையப்படுகிறது.

**கோவேறு கழுதைகள்** நாவலில் ஆரோக்கியமும் மேரியும் எதிர்கொள்ளும் பாலியல் வன்முறைகள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. காலனியில் அதிகாரம் பெற்ற பறையர் சாதியைச் சேர்ந்த ராமசாமியால் மேரி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது, ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்ணின் உடல் ஆதிக்கச் சாதி ஆணின் அதிகார வெளிப்பாடாகக் கருதப்படுவதைக் காட்டுகிறது. இந்நிகழ்வுக்குப் பின்னர் மேரியும் ஆரோக்கியமும் வெளிப்படுத்தும் மனவேதனை, தனிப்பட்ட துயரத்தை மட்டுமல்லாது, சாதி, பாலினம், குலத்தொழில் ஆகியவை இணைந்து உருவாக்கும் ஒடுக்குமுறை மனநிலையையும் வெளிப்படுத்துகிறது. குலத்தொழில், ஊர்ச்சோறு, மானம் போன்றவற்றால் மருளும் ஆரோக்கியம் மேரி தனக்கு நேர்ந்தவற்றை எதிர்க்காமல் அழுகின்றனர். மேரி, ஆரோக்கியம் கூற்றுகள் இவ்வாறு அமைகின்றன. அவை,

"இந்த உடம்பு ஏன்தான் இப்படி இருக்கோ? என்கிறார் மேரி. இதற்கு,

"இப்ப அதுக்கென்ன?" என்கிறார் ஆரோக்கியம்.

"உருட்டுக் கட்டையாட்டம் இருக்கிற இந்த உடம்பாலதான் ஊருல எல்லார்கிட்டயும் எனக்குச் சண்டை வருது. கீழ்ச்சாதின்னுகூடப் பாக்காமக் கடிக்க வரானுங்க." (இமையம், 1994:34)

பெண் பிறப்பு, சாதி, குலத்தொழில் ஆகியவற்றை நினைத்து மருளும் பாதிக்கப்பட்ட மனங்கள் கிராமவெளியை விட்டு விலகாமல், "நம்பளுக்கு முன்னாடி எம்பூட்டோ, நம்ப சாதி, சனம் இருந்துவிட்டுக் காலம் தள்ளினாப்ல நம்பளும் போவ வேண்டியதுதான். மனசு முக்கியம். உட்ராதே, உசுரு போனா நாம இல்ல. மனசு போச்சினா அது நமக்கில்ல. மனசக் கல்லாக்கிடு" (இமையம், 1994:03) என ஆரோக்கியம் புலம்புகிறார்.

பெண்ணின் உடல் தனிப்பட்ட இருப்பாக இல்லாமல், சாதிய அதிகாரம் தன்னுடைய மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் வெளியாக மாற்றப்படுகிறது. இதன் மூலம் பாலியல் வன்முறை, உடலின் மீதான தாக்குதலாக மட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மீது நிகழ்த்தப்படும் அதிகாரச் செயலாகவும் அமைகிறது.

**செடல்** நாவலில் உடையார் செடலை வைப்பாக வைத்துக்கொள்ள முயலும் நிகழ்வு, பெண் உடலை உடைமையாக்கும் ஆணாதிக்க மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. சேரிப் புறம்போக்கிடம், ஆற்றங்கரை போன்ற விளிம்புவெளிகளில் நடைபெறும் இந்நிகழ்வுகள், இடவியல் அதிகாரமும் பாலியல் அதிகாரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதை உணர்த்துகின்றன.

**ஆறுமுகம்** நாவலில் நகர்வெளியாக அமையும் ஆரோவில் சூழலிலும் பெண் உடல் பாதுகாப்பானதாக மாறுவதில்லை. தனபாக்கியம், வசந்தா, செக்குமேடு பகுதி பெண்கள் போன்ற கதைமாந்தர்கள் எதிர்கொள்ளும் அனுபவங்கள், கிராமவெளியைத் தாண்டி நகர்வெளிக்குச் சென்றாலும் பெண் உடல் ஆண் பார்வைக்கும் பாலியல் அதிகாரத்திற்கும் உட்பட்டே இருக்கிறது என்பதைச் சுட்டுகின்றன. இதன்மூலம் இடம் மாறினாலும் பெண்மீது செலுத்தப்படும் அதிகாரக் கட்டமைப்பு முழுமையாகச் சிதைவதில்லை என்பதைக் காட்டுகிறார் இமையம்.

இமையத்தின் இந்த மூன்று நாவல்களிலும் **கிராமவெளி – நிலம் – பெண் உடல்** என்ற மும்முக உறவு தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்படுகிறது. நிலத்தின் மீது உரிமை செலுத்தும் அதிகாரமும் பெண் உடலின் மீது உரிமை செலுத்தும் ஆணாதிக்கமும் ஒரே சமூகக் கருத்தியலின் இரு வெளிப்பாடுகளாக அமைகின்றன. இதன் விளைவாக குலத்தொழில், கூட்டுக்குடும்பம், மரபுவழி வாழ்வியல், சாதி ஒழுங்கு ஆகியவை தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்படுகின்றன.

எனவே, இமையத்தின் புனைவுகளில் பாலியல் வன்முறை என்பது தனித்த நிகழ்வாக இல்லாமல், சாதி, பாலினம், உடைமை, வெளி ஆகியவற்றின் பரஸ்பர உறவை வெளிப்படுத்தும் அரசியல் நிகழ்வாக அமைகிறது. பெண் உடலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சமூக அதிகாரம் தன்னை மீளுருவாக்கிக் கொள்கிறது என்பதை இந்நாவல்கள் பதிவு செய்கின்றன.

### *நகர்வெளி மறுப்பு*

இமையத்தின் தொடக்கக் கால நாவல்களில் நகர்வெளி விடுதலையின் வெளியாகக் கட்டமைக்கப்படுவதில்லை. மாறாக, நகரத்தை நோக்கிச் செல்லும் கதைமாந்தர்களின் வாழ்க்கை இழப்பு, உறவுச்சிதைவு, பண்பாட்டு விலகல், நிலையின்மை ஆகிய அனுபவங்களோடு இணைத்தே புனையப்படுகிறது. கிராமவெளியே கதைமாந்தர்களின் சமூக, பண்பாட்டு அடையாளங்களைத் தாங்கும் அடிப்படை வெளியாக மீண்டும் மீண்டும் முன்னிறுத்தப்படுகிறது.

**கோவேறு கழுதைகள்** நாவலில் நகரத்திற்குச் சென்ற ஆரோக்கியத்தின் மகன் பீட்டரின் வாழ்க்கை விரிவாகச் சித்திரிக்கப்படுவதில்லை. நகர்வெளியில் அவனுடைய வாழ்க்கை, அனுபவம், சமூக மாற்றம் ஆகியவை புனைவில் திட்டமிட்டே மௌனப்படுத்தப்படுகின்றன. இந்தப் புனைவியல் மௌனம் நகர்வெளிக்கு ஆசிரியர் வழங்கும் குறைந்த முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அதேவேளையில் நகரத்திலிருந்து வரும் மருமகள் சகாயம் குடும்ப ஒற்றுமையைக் குலைக்கும் கதைமாந்தராகச் சித்திரிக்கப்படுகிறார். மனைவி சகாயத்துடன் சின்னசேலம் இடம்பெயர்ந்த ஜோசப் பற்றி, “அட அந்தோணியாரே, எங்க பய ஜோசப்பா பீடி குடிக்கிறான். காசு பணமெல்லாம் பயக்கமுண்டா? மேச்சட்டயக் கயிட்டறதே இல்லியாமே. அதுகூட வெள்ள வெள்ர்னு தும்பப்பூவாட்டம் இருக்குதாமே. நிசமா தம்பி?” (1994:46) எனக் கேட்ட ஆரோக்கியம் நகர்வெளிக்குச் சென்ற மகன் உடை, நடை, மொழி, பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள் கிராமச் சமூகத்தின் பார்வையில் எதிர்மறையான மாற்றங்களாகவே பதிவு செய்யப்படுகின்றன. ஆரோக்கியம், “பழைய சாதிய அடிமை முறைக்குப் பழக்கப்பட்டு, அதனால் வளமடைந்து வந்த கிறித்துவ தலித் பெண்ணுக்கு நிம்மதி தருவது ஒடுக்கப்பட்ட நிலைமைதான். இந்த அடிமைச்சாதி வழக்கத்தைவிட்டு விடுதலையாகி நகர்ப்புறம் குடியேறிய தன் பிள்ளைகளைக் குடும்பத்தைச் சிதைப்பவர்களாக மனிதநேயமற்றவர்களாகப் பார்க்கிறாள்.” என்பார் ராஜ்கௌதமன் (1994:58). இவ்வாறு நகர்வெளி புதிய வாழ்வியல் சாத்தியத்தின் வெளியாக அல்லாமல், கிராமப் பண்பாட்டு ஒழுங்கிலிருந்து விலகும் வெளியாகக் கட்டமைக்கப்படுகிறது.

**ஆறுமுகம்** நாவலில் நகர்வெளி இழப்பும் நிலையின்மையும் நிறைந்த வெளியாகப் புனையப்படுகிறது. ஆரோவில் சென்ற தனபாக்கியமும் ஆறுமுகமும் புதிய வாழ்க்கையை

அடைவதற்குப் பதிலாக வாழ்வியல் நெருக்கடிகளையே எதிர்கொள்கின்றனர். நகர் இடப்பெயர்வு குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதில்லை; மாறாக அவற்றைச் சிதைக்கிறது. நகரத்திற்குச் சென்ற மகளும் பேரனும் முத்துக்கிழவரை வந்து பார்க்காத நிலையில், அவர் கிராமவெளியிலேயே உயிரை மாய்த்துக் கொள்கிறார். தனபாக்கியத்தின் கணவர் ஆரோவில் வேலைக்குச் சென்ற சூழலிலேயே உயிரிழக்கிறார். தருமமூர்த்தி, வசந்தா போன்ற நகர்வெளிக் கதைமாந்தர்களின் வாழ்க்கையும் நிறைவானதாக அமையவில்லை. மேலும், நகரத்தின் வளர்ச்சியடைந்த மையப்பகுதிகள் அல்ல; அதன் விளிம்புநிலை வாழ்விடங்களே கதையின் நிகழ்வுக் களமாக அமைகின்றன. இத்தகைய வெளி ஓர்மையை ராஜ்கௌதமன், “கிராமப் புறங்களில் நாயுடு சாதி நிலவுடைமையாளரிடம் அடிமைவேலை பார்த்துக் குடிசைகளில் வாழ்ந்து வந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த இளைய தலைமுறை, ஆரோவில்லில் வேலை பார்த்துப் பணம் பண்ணி வசதியான வாழ்க்கைக்கு மாறுவதைச் சீரழிவுப் பண்பாட்டில் சிக்குவதாகப் பார்க்கிறார்.” (2003:115) என்பார்.

**செடல்** நாவலில் நகர்வெளி மாற்று வாழ்வியலின் வெளியாக முன்னிறுத்தப்படுவதில்லை. பொட்டுக்கட்டிவிடப்பட்ட கிராமவெளியை விட்டு கூத்துக் கலைஞரான பொன்னனுடன் வெளியேறும் செடல், இறுதியில் மீண்டும் அதே கிராமவெளிக்கே திரும்புகிறார். இதனால் கிராமவெளியை விட்டு வெளியேறுதல் விடுதலையின் பயணமாக அல்லாமல், மீண்டும் கிராமவெளிக்குள் திரும்பும் வட்ட இயக்கமாகப் புனையப்படுகிறது. நாவலில் நகரம் ஒரேயொரு இடத்தில், அதுவும் மிகக் குறுகிய குறிப்பாக மட்டுமே இடம்பெறுகிறது. நகர்வெளி செடலின் வாழ்வில் புதிய சமூக அடையாளத்தையோ மாற்று வாழ்வியல் சாத்தியத்தையோ உருவாக்குவதில்லை. மாறாக, கதை முழுவதும் கிராமவெளியையே மையப்படுத்துகிறது. மேலும், நவீன பண்பாட்டின் அடையாளங்களாக விளங்கும் சினிமா, ஆர்க்கேஸ்ட்ரா போன்றவை செடலுக்கு அந்நியமானவையாகவும் எரிச்சலைத் தருபவையாகவும் சித்திரிக்கப்படுகின்றன. இதன்மூலம் நாட்டுப்புறக் கலை மரபுக்கும் நகரப் பண்பாட்டிற்கும் இடையிலான கருத்தியல் முரண்பாடு வெளிப்படுத்தப்படுகிறது.

மூன்று நாவல்களிலும் நகர்வெளி மூன்று வெவ்வேறு புனைவியல் உத்திகள் வழியாக மறுக்கப்படுவது புலப்படுகிறது. **கோவேறு கழுதைகள்** நாவலில் நகர் வாழ்க்கை மௌனப்படுத்தப்படுகிறது; **ஆறுமுகம்** நாவலில் நகரப்பெயர்ச்சி இழப்பு, உறவுச்சிதைவு, பாதுகாப்பின்மை ஆகியவற்றோடு இணைக்கப்படுகிறது; **செடல்** நாவலில் நகர்வெளி கதையின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு, கிராமவெளிக்கே மீளும் வட்ட இயக்கம் உருவாக்கப்படுகிறது. இதனால் நகர்வெளி விடுதலையின் வெளியாக அல்ல; அவநம்பிக்கை, நிலையின்மை, பண்பாட்டு விலகலின் வெளியாகவே கட்டமைக்கப்படுகிறது.

எனவே, இமையத்தின் தொடக்கக் கால நாவல்களில் நகர்வெளி நேரடியாக மறுக்கப்படுவதில்லை; ஆனால் நகரத்தை நோக்கிய வாழ்வியல் சாத்தியங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றன அல்லது சிதைவின் அனுபவங்களோடு இணைக்கப்படுகின்றன. இதற்கு மாறாக, அனைத்து முரண்பாடுகளுடனும் கிராமவெளியே கதைமாந்தர்களின் இயல்பான சமூக, பண்பாட்டு வெளியாக மீண்டும் நிறுவப்படுகிறது. இவ்வாறு நகர்வெளி மறுப்பும் கிராமவெளி விருப்பும் இணைந்து செயல்படுவது, இமையத்தின் தொடக்கக் கால நாவல்களின் வெளிசார் கருத்தியலையும் புனைவியல் அரசியலையும் வெளிப்படுத்தும் முக்கியமான கூறாக அமைகிறது.

*முடிவுரை*

இமையத்தின் **கோவேறு கழுதைகள்**, **ஆறுமுகம்**, **செடல்** ஆகிய நாவல்களின் கிராமவெளி என்பது வெறும் புவியியல் வாழ்விடமாக அல்லாமல், சாதி, பாலினம், உடைமை, உழைப்பு, பண்பாடு, அதிகார உறவுகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த சமூக வெளியாகக் கட்டமைக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. இந்நாவல்களில் கிராமவெளி–நகர்வெளி என்ற இருமை எதிர்வு வெறும் இடவியல் வேறுபாடாக அல்ல; இரண்டு மாறுபட்ட பண்பாட்டு அரசியல் அமைப்புகளின் மோதலாகப் பதிவாகிறது.

கிராமவெளி சாதி ஒழுங்கு, குலத்தொழில், குடும்ப மரபு, சமூக அதிகாரத்தைப் பாதுகாக்கும் வெளியாகச் செயல்படுகிறது. இதன் விளைவாக, மையம்–விளிம்பு, தூய்மை–அசுத்தம், உடைமை–உடைமையின்மை போன்ற இருமை எதிர்வுகள் வாழ்விட அமைப்பிலும் சமூக உறவுகளிலும் தொடர்ச்சியாக மீளுருவாக்கப்படுகின்றன. நகர்வெளி கல்வி, தொழில், பொருளாதார முன்னேற்றம், தனிநபர் சுதந்திரத்திற்கான வாய்ப்புகளை வழங்கும் மாற்று வெளியாகத் தோன்றினாலும், இமையத்தின் தொடக்க நாவல்களில் அது முழுமையான விடுதலையின் வெளியாக உருவாக்கப்படவில்லை. நகர்வெளிக்குச் செல்லும் கதைமாந்தர்கள் மீண்டும் கிராமவெளிக்குத் திரும்பவோ அல்லது புதிய வகையான நெருக்கடிகளை எதிர்கொள்ளவோ செய்கின்றனர். இதன் மூலம் கிராமவெளியின் பண்பாட்டு ஈர்ப்பும் அதன் கட்டுப்பாட்டு ஆற்றலும் வலுப்பெறுகின்றன.

பெண் உடலை நிலத்துடன் இணைத்து உடைமையாகக் கருதும் ஆணாதிக்கக் கருத்தியல், பெண்களின் உழைப்பு, பாலியல், ஒழுக்கம், வாழ்விடங்களை கட்டுப்படுத்தும் அதிகார அரசியலாக நாவல்களில் வெளிப்படுகிறது. பெண் உடலின் மீது நிகழும் பாலியல் வன்முறைகள் தனிநபர் குற்றங்களாக மட்டுமல்லாமல், சாதி, பாலின மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் சமூகச் செயல்முறைகளாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் உடல், நிலம், வெளி ஆகியவை அதிகார அரசியலின் பரஸ்பர தொடர்புடைய கூறுகளாகப் புனைவாக்கப்படுகின்றன.

எனவே, இமையத்தின் தொடக்க நாவல்கள் தலித் வாழ்க்கையைப் பதிவு செய்யும் சமூக ஆவணங்களாக மட்டுமல்ல; வெளி, அதிகாரம், சாதி, பாலினம் ஆகியவற்றின் உறவுகளை விமர்சனக் கண்ணோட்டத்தில் மறுவாசிப்பிற்கு உட்படுத்தும் முக்கியமான புனைவுகளாகவும் விளங்குகின்றன. குறிப்பாக, வெளிக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்நாவல்களை வாசிப்பது, தமிழ்த் தலித் இலக்கியங்களில் வெளி, அதிகாரம், அடையாளம், சமூக ஒழுங்கு ஆகியவை எவ்வாறு பண்பாட்டுரீதியாகக் கட்டமைக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

**முதன்மை நூல்கள்:**

[1]. இமையம், கோவேறு கழுதைகள் (1994) (மு.ப.), க்ரியா பதிப்பகம், சென்னை-41

[2]. இமையம், ஆறுமுகம் (1999) (மு.ப.), க்ரியா பதிப்பகம், சென்னை-35

[3]. இமையம், செடல் (2006) (மு.ப.), க்ரியா பதிப்பகம், சென்னை-35

**துணை நூல்கள்:**

[1]. காசிமாரியப்பன், க. கள் மணக்கும் பக்கங்கள் 2024 (மு.ப.) காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் - 01

[2]. சுரிந்தர் எஸ். ஜோத்கா, தமிழில்: பக்தவத்சல பாரதி சாதி – தோற்றமும் வளர்ச்சியும் 2023 (மு.ப.) காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் – 01

[3]. முத்தையா, இ. அடித்தள மக்கள் குறியீட்டுப் பயணவெளிகள், 2006 (மு.ப.) NCBH பதிப்பகம், சென்னை-98.

[4]. விக்னேஷ், கா. ‘மானுடம்’ இருதிங்கள் இதழ், பிப்ரவரி – மார்ச், 2026, மதுரை - 14

[5]. ராஜ்கௌதமன், தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு, 1994 (மு.ப.) NCBH பதிப்பகம், நாகர்கோவில் – 01

[6]. ராஜ்கௌதமன், தலித்திய விமர்சனக் கட்டுரைகள், 2003 (மு.ப.) காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் – 01